# செய்திகளும் குறிப்புகளும்

**24.10.2024, ஆரோவில்வாசிகளுக்கான தமிழ் வார ஏடு, ஆரோட்ரடுக்ஷன், எண்: 1079**

---

**ஸ்ரீ அரவிந்தர் - மனித சக்கரம்** (Human cycle)

**19. பகுத்தறிவுக் காலத்தின் வளைமுகடு**

மேலும் அனைத்து மறுப்புகளும் அல்லது மாற்றங்களும் ஒரு தண்டனைக்குரிய மதநிந்தனையாகக் கருதும் ஒரு மீறமுடியாத கோட்பாடுகளின் திரளாக மாற்றப்பட்டு ஒரு மதம்மாறிய மக்களின் பொறுமையற்ற கடமைப்பற்றாலும், உற்சாகத்தாலும் வன்முறையுடன் நடைமுறைப்படுத்தப்படும் ஒரு சமுதாய வழிபாடாக உருமாற்றம் செய்யப்பட்டுவிட்டது. பாசிச நாடுகள் குறிப்பிடத்தக்க வகையில் வெளிப்படையாகவே பகுத்தறிவினின்றும் தொலை தூரம் விலகியுள்ளன; ஒரு மேல்மட்டப் பிராண அக உணர்வுக் கோட்பாடு அதன் இடத்தைக் கைப்பற்றி விடுகிறது, மேலும் தேசிய ஆன்மா என்னும் பெயரிலும் அதனுடைய தன்வெளிப்பாடு (self-expression) மற்றும் விளக்கம் என்பதிலும் தான் அதன் தலைவர்களும் தீர்க்க தரிசிகளும் போதிக்கிறார்கள். மேலும் வன்முறையுடன் தங்களுடைய சர்வாதிக்க பயபக்தி ஆட்சிமுறையை வற்புறுத்துகிறார்கள். சாரமான கூறுகளில் இரஷ்யாவுக்கும் மற்றும் பாசிச நாடுகளுக்கும் வேறுபாடில்லை, எனவேதான் வெளியாரின் பார்வைக்கு அவற்றிடையே ஏற்படும் இரத்த வெறிச் சண்டைகள், பங்காளிகள் தங்களுடைய கொல்லப்பட்ட ஜனநாயக மற்றும் பகுத்தறிவுக்காலமாகிய பெற்றோர்களின் பரம்பரைச் சொத்திற்காகச் செய்துகொள்ளும் குடும்பச் சண்டை (blood-feud) போல் காட்சியளிக்கிறது. சமூக வாழ்க்கை ஓர் ஆதிக்கமிக்க தனித்தலைவனால், சர்வாதிகாரியால், செயலூக்கமிக்க சிறுபான்மைக் குழுவான நாஜி, பாஸிஸ்ட் அல்லது கம்யூனிஸ்டு கட்சித் தலைவனால், இராணுவமயமாக்கப்பட்ட கட்சிப் பற்றுடைய படையினரால் ஆதரிக்கப்பட்டு, கைப்பற்றப்படுகிறது. அங்கே மக்களின் சமுதாய, பொருளாதார, அரசியல் வாழ்க்கை ஒருபுதிய, ஒவ்வொரு பகுதியிலும் மிகத் திறமையுடன் கட்டுப்படுத்தப்பட்ட கடுங்கண்டிப்புடைய அமைப்பாக, விரைவில் இளக்கமற்ற உருப்பெறுகிறது. சிந்தனை, கல்வி, வெளிப்பாடு, செயல் இவை வற்புறுத்தலாக ஓர் இரும்பு வார்ப்பட அச்சில் உருக்கொடுக்கப்படுகிறது; மேலும் பயங்கரமான, இரக்கமற்ற, பெரும்பாலும் இரத்தவெறியுடன் அடக்கியொடுக்கும் கருத்துகள், வாழ்க்கை நோக்கங்கள் கொண்ட ஒருநிலைத்த அமைப்பை உருவாக்குகிறது: ஓர் உச்சத் திறமையையும், மனம், பேச்சு, உணர்ச்சி,வாழ்க்கை எல்லாவற்றிலும் ஒரே மாதிரி அச்சாக இருப்பதையும் வற்புறுத்த, சமூக வாழக்கை முழுவதிலும் முன்பு இருந்திராத ஒரு அழுத்தநிலை இருக்கிறது.

இந்தப்போக்கு உலகளாவியதாகுமானால், அது பகுத்தறிவுக் காலத்தின் முடிவு, தற்கொலை அல்லது தூக்கிடல் ஆகும் சாகடிக்கும் அழுத்தத்தினால் அல்லது தலைத் துண்டிப்பால், கடும்வதைத் தண்டனையால் மனிதமன ஜீவனின் பகுத்தறிவு மற்றும் அறிவாற்றல் விரிவாக்கத்தின் முடிவு வரும். மனிதனுடைய மனத்திற்கு சிந்திப்பதற்குரிய சுதந்தரம் மறுக்கப்பட்டால் அல்லது அதனுடைய சிந்தனையைச் செயல் மூலம் வாழ்க்கையில் நிறைவேற்றுவதற்குரிய சுதந்தரம் மறுக்கப்பட்டால் பகுத்தறிவு தன்பணியை ஆற்ற, செயல்பட அல்லது ஆள முடியாது. மேலும் இதிலிருந்து ஓர் அகவுணர்வுக் காலமும் விளைபயனாக வரமுடியாது. ஏனென்றால் அகவுணர்வின் வளர்ச்சி கூட, இளக்கமின்றி, தன் ஆன்மாவைத் தேடலின் இயக்கமின்றி, இயங்க, விரிவாக்கம் அடைய, வளர, மாறுபட இடமின்றி, முன்னேறமுடியாது. இதன் விளைவு மனிதவாழ்க்கையில் ஆதிக்கம் செலுத்த, தெளிவற்ற, உலகாயதமான அல்லது பிராணத்தன்மையான அல்லது இரண்டும் கலந்த கூடமதங்களின் (obscure mysticism) மோதல்களும் சண்டைகளும் கொண்ட, ஓர் இருண்ட துயரார்ந்த, ஒருவர்க்கும் உரியதல்லாத நிலம் ஏற்படலாம். ஆனால் இந்த முடிவு ஏற்படும் என்பது நிச்சயமல்ல, ஒழுங்கற்ற நிலையும் குழப்பமும் இன்னமும் ஆள்கின்றன, அனைத்தும் உறுதியற்ற நிலையில் இருக்கின்றன. சர்வாதிபத்திய மறை அச்சமதிப்புச் சூழமைவுமுறை இந்த உலகம் முழுவதையும் கைப்பற்றும் அச்சுறுத்தலை நிறைவேற்ற இயலாது, நீடித்திருக்கவும் கூட முடியாது. ஒரு பகுத்தறிவான இலட்சியம் இன்னமும் பிழைத்திருக்கக் கூடிய புவியின் பகுதிகள் விட்டுவைக்கப்படலாம். தற்போது தேசீயமனத்தின் மீதும் வாழ்க்கையின் மீதும் செலுத்தப்படும் பயங்கரமான அழுத்தம் உள்ளுக்குள்ளேயே வெடித்துச் சிதறலுக்கு இட்டுச்செல்லலாம்; அல்லது, அதற்குமாறாக அதனுடைய உடனடி இலட்சிய நிறைவேற்றத்தால் தணிவுறலாம், மேலும் அது அமைதியான காலங்களில் ஓர் அதிக இளக்கத் தன்மைக்கு இடமளிப்பதன் மூலம், மனித மனத்திற்கு அல்லது ஆன்மாவிற்கு ஓர் அதிக இயற்கையான முன்னேற்றத்திற்கான வழியையும், அவற்றின் சுய விரிவாக்கத்திற்கான உள்ளுந்துதலுக்கு ஓர் அதிக சுதந்தரமான களத்தையும் மீட்டுத்தரலாம்.

அவ்வாறாயின், தற்பொழுது திடீர் முடிவால் அச்சுறுத்தப்பட்டு வரும் பகுத்தறிவுக் காலத்தின் வளைவு நீடிக்கலாம்; மேலும் அதன் முழுமையைப் பெறலாம். மனித மனத்தினுடையவும் வாழ்க்கையினுடையவுமான அகவுணர்வுத் திருப்பம், அது தன்னைக் கண்டறியுமுன் ஏதோ ஒரு பொதுவான வெளிப்புறச் செயலில் அவசரப்பட்டு மூழ்கிவிடுவதைத் தவிர்த்து தன்பரிணாம வளர்ச்சி பெறவும், தன்சொந்த உண்மையைத் தேடியடையவும் காலமும் சுதந்தரமும் கிடைக்கலாம்; இவ்வாறு அது (மனித மனத்தின் வாழ்க்கையின் அகவுணர்வுத் திருப்பம்) மனித சமுதாயவளர்ச்சி சுருள்வட்டத்தை (spiral), பகுத்தறிவுக் காலத்தின் வளைவு அதன்சொந்த இயல்பான பரிணாம வளர்ச்சி இயற்கையாக முடிவடையும் இடத்திலிருந்து, மேற்கொள்ளத் தயாராகி ஓர் ஆழ்ந்த சித்பொருளின் வழிகளுக்கு ஆயத்தப்படுத்துகிறது.

**20. பகுத்தறிவு வளைமுகட்டின் முடிவு**

சமுதாயத்தின் பகுத்தறிவுக்கிசைந்த கூட்டாண்மைக் கருத்து முதற்பார்வையில், ஒரு சக்திவாய்ந்த கவர்ச்சியைக் கொண்டிருக்கிறது. அதன் பின்னால் ஒரு பெரிய உண்மை இருக்கிறது, அதாவது, ஒவ்வொரு சமுதாயமும் ஒரு கூட்டு ஜீவனைக் குறிக்கிறது, அதனுள்ளும் அதனாலும் தனிமனிதன் வாழ்கிறான், மேலும் அவன் தன்னால் கொடுக்க இயன்றதனைத்தையும் அதற்குக் கொடுக்கக் கடமைப்பட்டுள்ளான். அது மட்டுமல்ல சமுதாயத்துடன் ஒரு குறிப்பிட்ட உறவில்தான், இந்த பெரிய கூட்டான்மாவுடன் (collective self) ஒரு குறிப்பிட்ட ஒத்திசைவுடன்தான் அவன் தன்னுடைய வளர்ச்சியடைந்த அல்லது வளர்ந்துவரும் சக்திகளுக்கும் செயற்பாடுகளுக்கும் முழுப் பயன்பாட்டைக் காணமுடியும். அது கூட்டு ஆன்மா ஆனபடியால் கண்டு உணரக்கூடிய கூட்டுப் பகுத்தறிவும் விருப்பாற்றலும் அதற்கு இருக்கவேண்டும் என்று கொள்ளலாம்; இவற்றிற்கு ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட சுயவெளிப்பாட்டிற்கும், நடைமுறைக்கும் உணர்வுள்ள, பயன்தரும் வழிவகைகள் கொடுக்கப்பட்டால், இவை மேலும் மேலும் தங்கள் சரியான வெளிப்பாட்டையும் செயல்பாட்டையும் காணும். மேலும் இந்தக் கூட்டு விருப்பமும் அறிவாற்றலும் தன் மூலாதாரக் கருத்தாக எல்லோரும் சமம் என்பதைக் கொண்டிருப்பதால் அது தன்னுடைய சொந்த நன்மையைத் தேடி நடைமுறைப்படுத்தும் என்று நம்பலாம், மாறாகத் தனிமனிதனும் வகுப்பும் ஆட்சி செய்தால், எப்பொழுதும் தங்கள் அதிகாரத்தைப் பிற நோக்கங்களுக்காகத் தவறாகப் பயன்படுத்தக் கூடும். சமத்துவம் தோழமை இவற்றின் அடிப்படையில் அமையும் சமுதாய வாழ்வு சரியான அமைப்பு முறை: ஒவ்வொரு மனிதனுக்கும் சமுதாயத்தில் அவனுக்குரிய சரியான இடத்தை பொது நோக்கங்களுக்கான அவனுடைய முழுப் பயிற்சியையும் வளர்ச்சியையும், பணி, ஓய்வு, ஊதியம் ஆகியவற்றில் அவனுக்குரிய பங்கையும், கூட்டு ஜீவனான சமுதாயம் சம்பந்தமாக அவனுடைய வாழ்க்கையின் சரியான மதிப்பையும் தர வேண்டும்.

*(தொடரும்...)*

## தகவல்கள் ( I N F O R M A T I O N )

**ஆரோவில்லின் செயற்குழு, ஆரோவில் பவுண்டேஷனின் 20வது பிரிவின்படி முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது, சென்னை உயர்நீதிமன்றத்தால் 01.08.24 அன்று ஒரு தனி நீதிபதி பெஞ்ச் (2023-இன் க்வோ வாரண்டோவின் (உரிமையேது வினா W.P.எண்.12980) மூலம் சட்டப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டது.**

01.08.24 அன்று சென்னை உயர் நீதிமன்றத்தின் தனி நீதிபதி பெஞ்ச், அனு, அருண், ஸ்ரீமாயி, பார்த்தா, ஜோசேபா ஆகியோரைக் கொண்ட ஆரோவில் குடியிருப்பாளர்கள் பேரவையின் செயற்குழுவின் அதிகாரத்தை அங்கீகரித்து வலுப்படுத்தியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். செல்வராஜ், டினா ஆகியோர் ஆரோவில் பவுண்டேஷன் சட்டத்தின் 20வது பிரிவின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஆரோவில் சமூகத்திற்குள்ளும் வெளியேயும் கணிசமான குழப்பத்தை ஏற்படுத்திய, அங்கீகரிக்கப்படாத சில குடியிருப்பாளர்களால், செயற்குழுவின் சட்டபூர்வமான தன்மை குறித்த குழப்பம், ஆரோவில் சமூகத்திற்குள்ளும் வெளியேயும் கணிசமான குழப்பத்தை ஏற்படுத்தியிருந்தது.

**<u>இந்த உத்தரவில் கூறப்பட்டுள்ளதாவது:</u>**

*"60. [...] அனுமதிக்கப்பட்ட நிலையில் இருந்து R1 முதல் R7 வரை அதிகாரம் மற்றும் ஆதாரம் பெறுதல். அதாவது, 2021-இல் பிடபுள்யுஜி (PWG) நடைமுறைக்கு ஏற்ப R1 முதல் R4 வரை தேர்ந்தெடுக்கப்பட்டது மற்றும் 2022 ஏப்ரலில் பிரிக்-அவே (பிரிந்த) குழுவிற்கு பதிலாக R5 முதல் R7 வரை தேர்ந்தெடுக்கப்பட்டது.*

*61. பிரேக்-அவே குழுவின் உறுப்பினர்களை அகற்றுவது பிடபுள்யுஜி ஆவணத்தில் அத்தகைய அகற்றலுக்கு வழங்கப்பட்ட நடைமுறைக்கு இணங்க உள்ளது. R1 முதல் R7 வரையிலான சட்டப்படியான வயது வரம்பை கொண்டவர்கள் மற்றும் ஓஎஸ்டி (OSD)-ஆல் உரிய சரிபார்த்தலுக்குப் பிறகு அவர்களது பெயர்கள் குடியிருப்பாளர்களின் பதிவேட்டில் இடம் பெறுகின்றன என்பது மறுக்கப்படவில்லை. **எனவே, குடியிருப்பாளர் பேரவையின் (ரெஸிடென்ஸ் அசெம்பிளியின்) செயற்குழு உறுப்பினர்களாக அவர்களின் நிலை, தேவையான அதிகாரத்துடன் சட்டபூர்வமானதாகக் காணப்படுகிறது**.*

*62. அத்துடன், ஓஎஸ்டி (OSD), 20.02.2023 தேதியிட்ட ஆவணத்தில், R1 முதல் R7 வரையிலான செயற்குழுவை உள்ளடக்கியதாக பதிவுகள் வெளிப்படுத்துகின்றன, மேலும் இது R1 முதல் R7 வரையிலான பணிக்குழுவாகச் செயல்படத் தேவையான சட்டப்பூர்வத் தன்மையை உடையதாக இருக்கும்.*
*[...]*

***66. மேற்கூறிய விவாதத்தினை கருத்தில்கொண்டு, R1 முதல் R7 வரையிலான க்வோ வாரண்டோவின் (உரிமையேது வினா) உத்தரவைக் கோரும் மனு செல்லத்தக்கது இல்லை என்று நான் கண்டறிகின்றேன்.."***

சுருக்கமாக, மனுதாரர் மற்றும் பிரதிவாதிகளின் வாதங்களை பரிசீலித்த நீதிமன்றம், பதவியில் இருப்பதற்கான **உண்மையான செயற்குழுவின் அதிகாரத்தை சவால் செய்த *க்வோ வாரண்டோ* கோரிய ரிட் மனுவை தள்ளுபடி செய்தது.** வேறு வார்த்தைகளில் கூறுவதானால், **நீதிமன்றம் பிரதிவாதிகளுக்கு ஆதரவாக தீர்ப்பளித்தது** [R1 முதல் R7 வரை: அனு, அருண், ஸ்ரீமாயி, பார்த்தா, ஜோசேபா, செல்வராஜ், டினா & R8: ஆரோவில் பவுண்டேஷனின் செயலாளர்], **இதில் R1 முதல் R7 வரை செயற்குழுவாகச் செயல்படுவதற்கான உரிய அதிகாரம் பெற்றதாக அங்கீகரிக்கப்பட்டது.**

செயற்குழுவை தேர்வு செய்வதற்கான ஒழுங்குமுறை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாததன் காரணமாகவே தற்போதைய நிலைமைக்கு வழிவகுத்துள்ளதாகவும் நீதிமன்றம் கவனித்துள்ளது. நீதிபதி மேலும் இவ்வாறு கூறுகையில், ஆரோவில்லில் ஒழுங்குமுறை நடவடிக்கைகளுக்கான எந்தவொரு முயற்சியும் எதிர்ப்பைச் சந்திக்கிறது.

**<u>தொடர்புடைய பகுதிகள்:</u>**

"[...]56. செயற்குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தெளிவான கட்டமைப்பின்றி இதுவரை ஆரோவில்லின் அந்தஸ்துக்கு பங்களிக்கும் மதிப்புகள் மற்றும் கடமைகள் கொண்ட ஒரு அடித்தளம் இருப்பது மிகவும் வருந்தத்தக்கது. அத்தகைய ஒழுங்குமுறையின் தேவை இன்று இருப்பதை விட வேறு எப்பொழுதும் தெளிவாக இருந்ததில்லை, மேலும் இது சம்பந்தமாக இறுதி கட்டமைப்பை உருவாக்க ஒரு தெளிவான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

57. அவ்வாறான நோக்கத்திற்காக, குடியிருப்பாளர்கள் பேரவையின் செயற்குழுவைத் தேர்ந்தெடுப்பதற்கான வழிமுறைகள் குறித்த விதிமுறைகளை வெளிக்கொணர ஆரோவில் பவுண்டேஷன் (செயற்குழுவைத் தேர்ந்தெடுப்பதற்கான கட்டமைப்பு) ஒழுங்குமுறைகள், 2024 வெளியிடப்பட்டது, ஆனால் உடனடியாக 2024-இன் WP.No.1477-இல் சவால் செய்யப்பட்டது மற்றும் 23.02.2024 அன்று பெறப்பட்ட விதிமுறைகளுக்கு இடைக்காலத் தடை பெறப்பட்டது.

*58. **பவுண்டேஷனின் செயல்பாட்டை ஒழுங்குபடுத்தும் எந்தவொரு முயற்சியும் எதிர்ப்பையும், நீதிமன்றத்தை உடனடியாக நாடியதையும் மேற்கூறிய விவரிப்பு வெளிப்படுத்தும்**. இரண்டு ஒழுங்குமுறை விதிகளும், ஒன்று குடியிருப்பாளர்களின் பதிவேட்டைப் புதுப்பிப்பதற்கான நடைமுறைகளைக் கொண்டுவருதல் மற்றொன்று செயற்குழு உறுப்பினர்களை நியமித்தல் ஆகியவை இந்த மோசமான நிலைமையை எதிர்கொண்டது. எனவே, ஒழுங்குமுறை விதிகள் இறுதிசெய்யும் வரை, 04.09.2023 அன்று முதல் பெஞ்ச் வழங்கிய உத்தரவுகள் ஆரோவில்லின் மேலாண்மை மற்றும் செயல்பாட்டைக் கட்டுப்படுத்தும்."*

சட்டத்தின் பிரிவு 15(3)-இன்படி நியமிக்கப்பட்ட ஓஎஸ்டி-யின் (சிறப்பு பணி அதிகாரி) அதிகாரத்தை நீதிமன்றம் வெளிப்படையாக அங்கீகரித்து வலுப்படுத்தியுள்ளது பின்வருமாறு:

*""52. மறுபுறம், R8-இன் உத்தரவின் பேரில் ஓஎஸ்டி-ஆல் சமர்ப்பிக்கப்பட்ட பதிவேடு, அதன் உள்ளடக்கங்கள் தொடர்பான பல்வேறு விவரங்களின் அட்டவணை, 1861 உறுப்பினர்களுடன் முற்றிலும் மாறுபட்ட தோற்றத்தை வெளிப்படுத்துகிறது.*
*53. பிரிவு 15(3)-இன் அடிப்படையில் ஓஎஸ்டி நியமிக்கப்பட்டுள்ளார், அதன் அடிப்படையில், அதன் செயல்பாடுகளை திறம்படச் செய்வதற்குத் தேவையான பிற அதிகாரிகள் மற்றும் பணியாளர்களை நிர்வாகப் பேரவை (கவர்னிங் போர்டு) நியமிக்கலாம். பிரிவு 17 நிர்வாகப் பேரவையின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகளை பின்வருமாறு அமைக்கிறது [...]*

*[...]*
*55. பிரிவு 17-இன் உட்பிரிவு (d)-இன் படி, **ஆரோவில்லின் செயல்பாடுகளை கண்காணித்தல் மற்றும் மறுஆய்வு செய்யும் அதிகாரம் மற்றும் பவுண்டேஷன் மற்றும் பிற சொத்துக்களின் சரியான நிர்வாகத்தைப் பாதுகாக்கும் அதிகாரம் ஆரோவில்லின் நிர்வாகப் பேரவைக்கு உள்ளது**. எனவே, இந்த நீதிமன்றம் வழங்கிய இடைக்கால உத்தரவுகளால்*

*உறுதிப்படுத்தப்பட்டபடி, இன்றுவரை, பவுண்டேஷனின் செயல்பாட்டை மேற்பார்வையிடுவதற்கான சரியான அதிகாரி ஓஎஸ்டி தான். எனவே நான் ஓஎஸ்டி-இன் அந்தஸ்த்தை உறுதிப்படுத்துகின்றேன்.*
*குடியிருப்பாளர் பேரவையின் செயற்குழு, அனு, அருண், ஸ்ரீமாயி, பார்த்தா, ஜோசேபா, செல்வராஜ், டினா ஆகியோரைக் கொண்டது என்பதை இத்தீர்ப்பு உறுதிப்படுத்துவது மட்டுமன்றி, பொய்யின் மீதான உண்மையை நிலைநாட்டுவதில், குழப்பத்தின் மீதான தெளிவின் மற்றொரு வெற்றியாகும்.*

*மேலும் தகவலுக்கு, ஏவிஃப் லீகல் ஆன் ஆரோவில் வெளியிட்ட கட்டுரையைப் பார்வையிடவும், அசல் ஆர்டரின் நகலையும், இந்த விஷயத்தில் சமூகத்தில் பொதுவாக அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளுக்கு பதிலளிக்கும் ஆவணத்தையும் நாங்கள் சேர்த்துள்ளோம்.*

*- ஏவிஃப் சட்ட ஒருங்கிணைப்பாளர் சிந்துஜா அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.*

---

## அ றி வி ப் பு க ள் ( A n n o u n c e m e n t s )


**மல்டி மீடியா சென்டர் அரங்கம் (எம்எம்சி, டவுன் ஹால்)**
(MULTI MEDIA CENTRE AUDITORIUM (MMC, Town Hall)

**நினைவூட்டல்: அக்டோபர் 25 வெள்ளிக்கிழமை இரவு 8:00 மணிக்கு, "தி ஆப்ரிக்கன் குயின்" (The African queen)** அமெரிக்கா, யூகே, 1951, *இயக்கம்* - ஜான் ஹூஸ்டன்,. *நடிப்பு* - ஹம்ப்ரி போகார்ட், கேத்தரின் ஹெப்பர்ன், ராபர்ட் மோர்லி
"தி ஆப்ரிக்கன் குயின்" என்ற திரைப்படம் முதலாம் உலகப் போரின் போது எடுக்கப்பட்ட காதல் நகைச்சுவைத் திரைப்படமாகும். இது C.S. ஃபாரெஸ்டரின் நாவலைத் தழுவி எடுக்கப்பட்டது.
*ஆங்கில மொழிப்படம், ஆங்கிலத் துணை வாசகங்கள் கொண்டது. கால அளவு: 1 மணிநேரம் 45 நிமிடம்.*

நவம்பர் 1 வெள்ளிக்கிழமை இரவு 8:00 மணிக்கு, **தி சால்ட் ஆஃப் தி எர்த் ("The Salt of the Earth").**
*இயக்கம்:* விம் வெண்டர்ஸ், ஜூலியானோ ரிபீரோ சல்காடோ, பிரான்ஸ், பிரேசில், 2014.
இது ஒரு ஆவணப்படமாகும், *பிரஞ்சு மொழிப்படம், ஆங்கிலத் துணை வசனங்களுடன். காலம்: 1 மணிநேரம் 50 நிமிடம்.*

------------------------------

**முதல் பயிற்சி வகுப்பு - திரைப்பட மதிப்பீடு நிகழ்ச்சி** (First Workshop - Film Appreciation Programme)



**நவம்பர் 2 மற்றும் 3 - ஃபியுச்சர் ஸ்கூல் பள்ளி ஆடிட்டோரியம்**

திரைப்பட மதிப்பீடு என்பது ஒரு திரைப்படத்தின் கூறுகளை பகுப்பாய்வு செய்து புரிந்துகொள்வதன் மூலம் அது ஏன் வேலை செய்கிறது மேலும் எது சிறந்ததாக்குகிறது என்பதை அறிந்து கொள்வதாகும். இவ்வகுப்புகள் திரைப்படத்தை ஒரு மொழியாகப் புரிந்துகொள்ள உதவும்; திரைப்பட வரலாறு; அதன் தொழில்நுட்பம் மற்றும் அழகியல்; திரைப்படங்கள் எவ்வாறு அர்த்தத்தை உருவாக்க மற்றும் நமது எண்ணங்களையும் உணர்வுகளையும் தூண்டுவதற்கு அவற்றின் தனித்துவமான மொழியைப் பயன்படுத்துகின்றன.

அனைத்து அமர்வுகளிலும் பேச்சுகள், பவர்பாயிண்ட் விளக்கக்காட்சிகள், குறும்படங்கள், திரைப்படக் காட்சிகள் அத்துடன் கலந்துரையாடல் பங்கேற்பு ஆகியவை இடம்பெறும்.

ஒளிப்பதிவுத் துறையில் விரிவான அனுபவமுள்ள திரைப்பட இயக்குநரும், பிரபல பேராசிரியருமான **சிவகுமார் மோகனன்** அவர்கள் இந்த பயிற்சி வகுப்புகளை நடத்துகிறார்.

தகவல் மற்றும் பதிவுக்கு: 83003 64055 வாட்ஸ்அப் / (0413) 2622037 / afacademy.team@gmail.com

*சுசானா மற்றும் ஆரோஃபில்ம் குழு*

---

**மண்டலா பாட்டரி** (Mandala Pottery)

இந்த **ஆண்டு தீபாவளி விற்பனைக்கு** உங்களை எங்களது ஸ்டுடியோவிற்கு அழைக்கிறோம்
டேபிள்வேர், அலங்கார மற்றும் கட்டடக்கலை மட்பாண்டங்கள்
...குறைந்தது 20% குறைந்த விலையில்!!!
15.11.2024 வரை, காலை 9 - 12 மணி, பிற்பகல் 1 - 4 மணி வரை மட்டுமே விற்பனை.
ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்கள் மூடப்படும்.
விடுமுறை நாட்களில் வருவதென்றால் முன் கூட்டியே தெரிவிக்கவும்
அனைவரும் வருக! மண்டல பாட்டரி, டானா, ஆரோவில்.
தொலைபேசி: (0413) 2622685 : www.mandalapottery.com : கூகுள் மேப்பில் மண்டலா பாட்டரியை காணவும்!


---

**பிசிசி அலுவலகத்தின் அறிவிப்பு** (An Announcement From BCC Office's)

அன்பார்ந்த சமூகத்தவருக்கு, பிசிசி அலுவலகத்தின் புதிய லேண்ட்லைன் தொலைபேசி எண் - **0413-3509953.**
பழைய தொலைபேசி எண் துண்டிக்கப்பட்டது
அன்புடன், பிசிசி அணி - (அங்குராஜன், ஆர்த்தி, கலையரசி, ரவீந்திரா, விக்டோரியா)

---

## சாவித்திரியில் உள்ள வாசகங்கள் பற்றிய பிரதிபலிப்புகள்: "அன்பு" - லாரி சீட்லிட்ஸ்
(Reflections on Passages in Savitri: Love - Larry Seidlitz)



*சாவித்திரியின்* முக்கிய கருப்பொருள் அன்பு ஆகும், மேலும் இந்த விளக்கக்காட்சியில் கவனிக்கப்பட வேண்டிய பத்தியானது அதன் ஆழமான மாய முக்கியத்துவத்தைப் பற்றி விவாதிக்கிறது, இது சாவித்திரி, சத்யவான் ஆகியோரின் கதையிலும், ஸ்ரீஅரவிந்தர், ஸ்ரீ அன்னை ஆகியோரின் வாழ்க்கை மற்றும் பணியிலும் பிணைக்கப்பட்டுள்ளது. இந்தப் பத்தியில் அன்பை ஒரு தெய்வீகச் சக்தியாக வெளிப்படுத்துகிறது, இது இந்த பூமிக்குரிய வாழ்க்கையை தெய்வீக வாழ்க்கையாக மாற்றும், அதே நேரத்தில் நமது பொதுவான மனித அன்பு மற்றும் அதன் அடிப்படை வழித்தோன்றல்களுடன் அதன் தொடர்பைக் காட்டுகிறது. காடுகளின் ஓரத்தில் சாவித்திரி, சத்யவான் ஆகியோரின் சந்திப்புக்கு வழிவகுத்தது, முதல் பார்வையில், அவர்களின் ஆன்மாவின் நினைவை எழுப்பியது, மேலும் அவர்களின் இரு வாழ்க்கையைப் பிரிக்கும் மூடுபனியைக் கிழித்தது. ஆனால் மிகவும் குறிப்பிடத்தக்க வகையில், இந்தப் பத்தியில் அவர்களின் கதையை ஸ்ரீ அரவிந்தர், ஸ்ரீ அன்னை ஆகியோரின் கதையுடன் இணைக்கிறது, அவர்களின் தெய்வீக அன்பு மனிதகுலத்திற்கும், உலகத்திற்கும் செழிப்பான வாழ்க்கையாக மாற்றும் உயர்ச்சக்தியை கொண்டு வந்தது.

**2024 அக்டோபர் 26, சனிக்கிழமை மாலை 4 மணிக்கு**
**சாவித்திரி பவனில் உள்ள சங்கம் ஹால்**
**அனைவரும் வருக!**

---

## ஆரோவில் சுகாதார மையத்தின் அறிவிப்பு (Announcement from Auroville Health Centre)

பாண்டிச்சேரியின் சிம்ஹா செவிப்புலன் மற்றும் பேச்சு சிகிச்சை மையம் ஆரோவில் சுகாதார மையத்தில் அதன் சேவையைத் தொடங்குகிறது.
45 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவமுள்ள பேராசிரியர் என்.டி.ராஜன் மற்றும் 20 வருட அனுபவமுள்ள திருமதி எம்.மஞ்சு, ஆடியோலஜிஸ்டுகள் மற்றும் ஸ்பீச் தெரபிஸ்ட்கள், 2024 நவம்பர் முதல் தங்கள் சேவைகளை வழங்குவார்கள்.
அவர்கள் மாதந்தோறும் 2வது மற்றும் 4வது சனிக்கிழமைகளில், நவம்பர் 9 முதல், மதியம் 2 - 5 மணிக்குள் வருகை தருவார்கள்.
அவர்கள் பின்வரும் சேவைகளை வழங்குவார்கள்:
ஆடியோமெட்ரி (காது கேட்கும் மதிப்பீடு)
ஹியரிங் எய்ட் பொருத்துதல் (சீமென்ஸ், ஃபோனாக் மற்றும் பிற பிரபல பிராண்டுகள் போன்றவை)
ஹியரிங் எய்ட்ஸில் புரோகிராமிங் மற்றும் மறுசீரமைப்பு.
பேச்சு மற்றும் குரல் பிரச்சனைகளுக்கான ஆலோசனை.

இத்துடன், பேட்டரிகள், சுத்தம் செய்யும் கருவிகள் போன்ற ஹியரிங் எய்ட்ஸ்க்கான அடிப்படை பாகங்கள் 2024 நவம்பர் இரண்டாவது சனிக்கிழமை முதல் நம் மருந்தகத்தில் கிடைக்கும்.

---

## பிசிசி ஃபைனான்ஸுக்கு ஒரு நிதி ஒருங்கிணைப்பாளர் தேவை (BCC Finance is looking for a Finance Coordinator)

பட்ஜெட் ஒருங்கிணைப்புக் குழு (பிசிசி) நிதி ஒருங்கிணைப்பாளர் பதவிக்கான வேலை விவரம்:

- பேலன்ஸ் ஷீட்களைப் படித்து செயலாக்கும் திறன், பிசிசிக்கான கணக்கீடுகளைச் செய்தல்.
- சமர்ப்பிக்கப்பட்ட பட்ஜெட்டுகள், பங்களிப்புத்தொகைகள், பெறப்பட்ட கணக்கீடுகள் பற்றிய தெளிவுபடுத்தல்கள் தொடர்பாக நிர்வாகிகள் மற்றும் அறங்காவலர்களுடன் தெளிவாகத் தொடர்புகொள்ளுதல்.
- மூத்த மற்றும் அனுபவம் வாய்ந்தவராக இருப்பது நல்லது, விசாரணைகள் மற்றும் சவாலான தொடர்புகளை ஆரோவில்வாசிகளுடன் கையாளத் தயாராக இருத்தல்.
- நிறுவனங்களின் (யூனிட்) நிர்வாகிகளின் கேள்விகளைத் தீர்க்க உய்யச் சிந்தனையுள்ள மனதைக் கொண்டிருத்தல்.

விண்ணப்பதாரர் பின்வரும் கல்வியை முடித்திருக்க வேண்டும்.

- இந்தியப் பட்டப்படிப்பு: நிதி மற்றும் தணிக்கைத் துறையில் குறைந்தபட்சம் 3 ஆண்டுகள் கள அனுபவத்துடன் எம்.காம் அல்லது எம்பிஏ பைனான்ஸ்.

தயவுசெய்து எச்ஆர்-ஐத் தொடர்புகொள்ளவும். hr-bcc@auroville.org.in அல்லது ஆவணக்காப்பகக் கட்டிடத்தில் உள்ள பிசிசியில் உள்ள எங்கள் அலுவலகத்திற்கு வரவும். கடந்து செல்லவும். எச்ஆர் சார்பாக, *சுரேஷ் & ராஜா*

---

## உபாசனாவில் தீபாவளியைக் கொண்டாட வரவேற்கிறோம்! (Welcome to Diwali at Upasana!)

01.11.2024, வெள்ளியன்று தீபாவளித் திருநாளை ஒன்றாகக் கொண்டாட எங்களுடன் சேருங்கள்.
1999 முதல், உபாசனாவில் பாராயணம் செய்தல், விளக்குகள், பூக்கள், சிற்றுண்டிகள் நிறைந்த ஒரு அழகான சமூக நிகழ்வாக தீபாவளி கொண்டாடப்படுகிறது. அனைவரும் வருக!

**தேதி: 01.11.2024, வெள்ளி, நேரம்: மாலை 6 மணி முதல், இடம்: உபாசனா, ஆரோஷில்பம்**

தீபத்திருநாளை ஒன்றாகக் கொண்டாடுவோம்!
நிகழ்ச்சி ஏற்பாடு - *உபாசனா & ஆரோவில் சமூகம்*

---

**காகித கைவினைப் பயிற்சி வகுப்பு** (Paper craft workshop)

கழிவு காகிதத்தை கலையாக மாற்றும் செயல்முறையை அறிந்து மகிழ எங்கள் பயிற்சி வகுப்பில் சேரவும். பழைய செய்தித்தாள்களில் இருந்து உங்களின் தனித்துவமான அப்சைக்கிள் தயாரிப்புகளை உருவாக்கி, அவற்றை நீங்கள் வீட்டிற்கு எடுத்துச் செல்லலாம். ஞாயிறு தவிர தினமும் காலை 10 - மாலை 4 மணி.

தொடர்புக்கு: வெல்பேப்பர், ஆரோவில். அழைக்கவும் +91 9385744722. 0413 2969722

---

**ஈக்கோ சேவையில் உள்ள பொக்கிஷங்களை பெற்றுக்கொள்ள வாருங்கள்** (Come Check ECO Service Treasures)



அன்பார்ந்த சமூகத்தவருக்கு,
தட்டுகள், பிவிசி பைப்புகள், பழுதுபார்க்கும் பொருட்கள், கண்ணாடிகள், கண்ணாடி பாட்டில்கள், மேலும் பல மதிப்புமிக்க பல்வேறு பொருட்களை நாங்கள் மகிழ்ச்சியுடன் ஈக்கோ சேவையில் வழங்குகிறோம்.
அனைத்து மறுசுழற்சி செய்பவர்களும் அல்லது அத்தகைய பொருட்கள் தேவைப்படும் எவரும் திங்கள் முதல் சனி வரை, காலை 10:30 - 12:30 மணி வரை மற்றும் பிற்பகல் 3:00 - 4:30 மணி வரை எப்போது வேண்டுமானாலும் வந்து எடுத்துச் செல்லுமாறு வரவேற்கிறோம்.

நீங்கள் வருவதற்கு முன் சுமித்தை 6379-669034 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.
விரைவில் சந்திப்போம்! - *ஈக்கோ சேவை*

---

**உடல் மூலம் விழிப்புணர்வு** (Awarness Through the Body)



**ஹானர் & வேகா ஆகியோருடன் - ரிதம் & சுவாசம் கண்டறிதல்**

ஏடிபி (உடல் மூலம் விழிப்புணர்வு) தன்னுடன் இணைவதற்கு ஒரு இடத்தை அளிக்கிறது, மேலும் சுய கண்டுபிடிப்பு மற்றும் அக வளர்ச்சிக்கான வாய்ப்புகளை வழங்குகிறது. இப்பயிற்சி வகுப்பில், ரிதம் மற்றும் சுவாச செயல்பாடுகள் மூலம், **பல்வேறு தருணங்களில் கவனம், மனத்தை ஒருமுகப்படுத்துதல், ஒருங்கிணைப்பு, இருப்பதற்கான திறன், சுயக் கட்டுப்பாடு** ஆகியவற்றை கண்டறிந்து அவற்றை மேம்படுத்துவோம்.

தன்னுடனும் மற்றவர்களுடனும் நமது தொடர்பையும் புரிதலையும் அனுபவிக்க அல்லது ஆழப்படுத்த விரும்பும் அனைவரையும் வரவேற்கிறோம்.
முன்பதிவு தேவை. தொடர்பு கொள்ளவும்: 91598 56148 / dancingtree.smile@gmail.com பதிவு இணைப்பு: https://shorturl.at/qTOa4

**நவம்பர் 2, சனிக்கிழமை, காலை 9.30 - நண்பகல் 12.30 மணி.**

அனைவரும் வருக! நன்றி. வாழ்த்துக்கள். அன்புடன், *வேகா*

---



**ஆரோவில் பாரத் நிவாஸ் இந்தியப் பெவிலியன் வழங்கும்**

**நிருத்தியர்பன் - ஒடிஷி நடனம் - சங்கீதா டேஷ் மற்றும் அவரது மாணவர்கள்**

**நாள்: 03 நவம்பர் 2024 ஞாயிற்றுக்கிழமை, இரவு 07:00 மணி -**
**இடம்: ஸ்ரீ அரவிந்தர் அரங்கம், பாரத் நிவாஸ், ஆரோவில்**

*விசாரணை தொடர்புக்கு: கிருஷ்ணா +91 97878 80211.*
*மெயின் கேட்டிற்கு வெளியே வாகனம் நிறுத்துமிடம் உள்ளது.*

---

**பிரெஞ்சு பெவிலியன் மற்றும் யூனிகார்ன் கலெக்டிவ் வழங்கும்**
(The French Pavilion and Unicorn Collective present)



**கதை சொல்லும் கலைப் பயிற்சி வகுப்பு - மிரெய்ல்**
(The Art of Storytelling Workshop By Mireille)

**2024 அக்டோபர் 30, புதன்கிழமை மாலை 4:30 - 6 மணி.**
**பிரஞ்சு பெவிலியனில் (விசிட்டர் சென்டர் எதிரில்)**

15 நாட்களுக்கு ஒரு முறை பெரியவர்களுக்கான பயிற்சி வகுப்பு.
முன்பதிவு தேவை: +33618709157 (வாட்ஸ்அப்)

---

## ஹைவ் கோ-ஒர்க்கிங் ஸ்பேஸ் - ஓபன் அவுஸ் (HIVE COWORKING SPACE – OPEN HOUSE)

**அக்டோபர் 25, வெள்ளி, காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை, ஹைவ், ஆரோமோட்.**




**ஹைவ் கோ-ஒர்க்கிங் வெள்ளிக்கிழமை தோறும் இலவசம்.**
நீங்கள் பணிபுரிய விரும்புகிறீர்களா? ஹைவ்-க்குள் நுழைந்து, அதிவேக இணையம், காபி - அனைத்தும் எங்கள் ஓபன் ஹவுஸில் இலவசமாக கிடைக்கும் வசதியான பணியிடத்தை அனுபவிக்கவும்.

• எங்கள் திட்டங்கள் மற்றும் வசதிகள் பற்றிய கூடுதல் விவரங்களுக்கு *www.auromode.in/hive-coworking* -இல் எங்களைப் பார்வையிடவும்.

• தொடர்புக்கு: *auromodehive@auroville.org.in* +91 7092197375 (வாட்ஸ்அப்) / +91 9042759540 (வாட்ஸ்அப்) அல்லது நேரில் வரவும். அனைவரையும் வரவேற்கிறோம்!!!

*ஹைவ் டீம் சார்பாக தேஷ்*

---

## முக்கிய அறிவிப்பு: ஆரோவில் ஹெல்த் பண்ட் பங்களிப்புத்தொகை திருத்தம்
(Important Announcement: Revision of Auroville Health Fund Contribution)

அன்பார்ந்த ஆரோவில் ஹெல்த் பண்ட் உறுப்பினர்களே,
கடந்த பல ஆண்டுகளாக சமூகத்தின் மருத்துவச் செலவினங்களை முழுமையாக மதிப்பாய்வு செய்ததைத் தொடர்ந்து, எஃப்ஏஎம்சி-பிசிசி ஆனது, ஆரோவில் ஹெல்த் ஃபண்ட் பங்களிப்புத்தொகையை இனிவரும் காலங்களில் மாற்றியமைக்க முடிவு செய்துள்ளது.

**திருத்தப்பட்ட பங்களிப்புத் தொகைகள் (2024 நவம்பர் 1 முதல் அமல்):**
- பெரியவர்கள் (18 வயதுக்கு மேல்): ₹660
- குழந்தைகள் (18 வயதுக்குட்பட்டவர்கள்): ₹330

கடைசியாக 2022-23 நிதியாண்டில் திருத்தம் செய்யப்பட்டது. (முன்னர் குழந்தைகளுக்கு ரூ.250 முதல் ரூ.300 வரை மற்றும் பெரியவர்களுக்கு ரூ.500 முதல் ரூ.600 வரை இருந்தது)

**முக்கியத் தகவல்:**
- நகரச் சேவையில் (சிட்டி சர்வீஸில்) இருந்து பராமரிப்புத்தொகை பெறும் தனிநபர்கள் மற்றும் குழந்தைகளுக்கான திருத்தப்பட்ட ஹெல்த் பண்ட்டுக்கான பங்களிப்புத்தொகையை பிசிசி வழங்கும்.

- 2024 நவம்பர் 1 முதல் திருத்தப்பட்ட முழுத் தொகையையும் பங்களிக்குமாறு நிறுவனங்கள், தங்களைத் தாமே பராமரித்து வருபவர்கள் ஆகியோரைக் கேட்டுக் கொள்கிறோம்.

நமது சமூகத்தின் அனைத்து குடியிருப்பாளர்களின் நல்வாழ்வைப் பேணுவதில் உங்கள் புரிதலையும் தொடர்ந்து ஆதரவையும் வழங்குமாறு நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

உண்மையுள்ள, *எஃப்ஏஎம்சி & பிசிசி,* 21 அக்டோபர் 2024

---

## ஓவியக் கண்காட்சி (Art Exhibition)



**லிஸெனிங் பியான்ட் (Listening Beyond) - லூகாஸ் போசாடா**

**- 2023 அக்டோபர் 30 - நவம்பர் 26**

**திறப்பு: அக்டோபர் 30 புதன்கிழமை, மாலை 4 - 6 மணி.**

**பித்தாங்கா கலாச்சார மையம், ஆரோவில்**

**கண்காட்சி நேரங்கள்: தினசரி, ஞாயிறு தவிர காலை 8.30-12.30 & பிற்பகல் 2.30 - மாலை 5.30**

பித்தாங்கா கலாச்சார மையம், சமஸ்டி, ஆரோவில் 605 101 | info@pitanga.in | 0413 2622403, 9443902403. ஆரோவில் பவுண்டேஷனின் ஒரு சேவைப் பிரிவு, ஹெல்த் அண்ட் ஹீலிங் டிரஸ்ட் கிளை | GSTIN: 33AAATA0037BY3N

---

## இரக்கம் காட்டுவதற்கான நேரம்: ஆரோவில் பொறுப்பேற்குமாறு ஓர் வேண்டுகோள்
(A Time for Compassion: Auroville's Call for Taking Responsibility)

மீண்டும் ஒருமுறை, எண்ணற்ற நாய்க்குட்டிகள் பிறக்கின்றன. அவை ஆரோவில்லில் குப்பை போல தூக்கி வீசப்படுகின்றன அல்லது இரவு நேரத்தில் நம் வேலிகளுக்குள்ளே வீசப்படுகின்றன, அத்தகைய காலகட்டம் இது. "எவரும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு இதைப் பற்றி சிந்திப்பதும் அல்லது கவனிப்பதும் இல்லை. இது காப்பகத்தின் பிரச்சினையாக இருக்கட்டும்!" நாய்கள் இனப்பெருக்கம் செய்யும்போது வருடத்திற்கு இரண்டு முறையாவது இது நடக்கும், மேலும் எங்களது காப்பகம் பல மீட்டெடுக்கப்பட்ட நாய்களால் நிரம்பியுள்ளது. தினசரி எங்களுக்கு அதிகளவில் தொலைபேசி அழைப்புகள் வருகின்றன, சில அன்புடனும், சில இந்த ஆதரவற்ற நாய்களை அழைத்துச் செல்லுமாறு அச்சுறுத்தியும், ஆனால் எங்களது காப்பகம் முழு திறனைத் தாண்டி, குறைவான நிதியுடன் செயல்படுகிறது, போதுமான பணியாளர்களும் இல்லை, உணவும் மருந்துகளும் கிட்டத்தட்ட தீர்ந்துவிட்டன, மேலும் மழைக்காலத்தில் உதவ தன்னார்வலர்களும் இல்லை. மீட்பு மற்றும் கருத்தடைகள் செய்யப்பட்ட நாய்களுக்கு இடமளிக்கும் வகையில் காப்பகத்தின் பின்புறத்தை விரிவுபடுத்துவதற்கான அனைத்து முயற்சிகளும் நாங்கள் செய்தாலும், ஆதரவின்றி எங்களால் இன்னும் பலவற்றை செய்ய முடியாது.

"ஆரோவில்லில் நாய்கள் வேண்டாம்!" என ஸ்ரீ அன்னை அறிவித்ததாகக் கூறுபவர்கள் எப்போதும் உண்டு. இது முற்றிலும் உண்மை இல்லை. ஒரு நாய்க்குட்டி தெருக்களில் கைவிடப்பட்டதைக் காணும்போது ஸ்ரீ அன்னை கூறியதைக் கவனியுங்கள்:
நான், என் முழு மனதுடன் அதில் இறைவனைக் காணமுடியும், ஒரு நாய்க்குட்டியின் முன் வணக்கம் செலுத்த முடியும். நீங்கள் இறைவனைப் பற்றி சிந்திக்க வேண்டும், இல்லையா? (அஜண்டா 3:343).

நகரத்தின் நாய்கள் காப்பகத்திற்கு நிதி திரட்டுவது, காப்பகத்தின் சுமை மட்டுமல்ல, கூட்டுப் பொறுப்பு என்பதை ஆன்மீக சமூகமாக, குறிப்பாக ஆரோவில் நிர்வாகத்தில் உள்ளவர்கள் உணர வேண்டிய நேரம் இது. இது பணம், பட்ஜெட் பற்றியது மட்டுமல்ல; இது இரக்கம், பொறுப்பு, உயிரினங்களின் துன்பங்களைக் குறைப்பது பற்றியதும் ஆகும்.

ரேபிஸ் போன்ற ஆபத்தான நோய்களிலிருந்து சமூகத்தைப் பாதுகாக்கும் அதன் பணியைத் தொடரவும், முறையாக கருத்தடை செய்வதன் மூலம் ஒட்டுமொத்த நாய்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தவும், நாய்க்குட்டிகளின் பிரச்சனையை முடிவுக்கு கொண்டுவரவும் ஆரோவில்லின் ஆதரவு எங்களுக்கு அவசரமாகத் தேவைப்படுகிறது. ஆரோவில் தனது பொறுப்பில் ஏற்றுக்கொண்டு, புதிய ஆரோவில் நாய்கள் காப்பகம் அதன் சொந்த வருமானம் மூலம் தன்னிறைவு பெறும் வரை, குறைந்தபட்சம் அடிப்படை மாதாந்திர இயக்கச் செலவான 3 இலட்சம் வழங்க வேண்டும். ஆரோவில்லின் அடிப்படை இலட்சியங்கள், ஸ்ரீஅன்னையின் கூற்றுகள், வெறும் வெற்று வார்த்தைகளாக இல்லாமல், அனைத்து உயிர்களிடத்தும் அன்பையும் அக்கறையையும் நீட்டிப்பதற்கான தினசரி நினைவூட்டலாக இருக்க வேண்டும்.

“ஒருவன் தெய்வீக ஒருமையின் உணர்வை அடைந்தால் மட்டுமே உண்மையான அணுகுமுறையைப் பெற முடியும்; இதற்கிடையில், விலங்குகளை எப்போதும் மரியாதையுடனும், அன்புடனும், இரக்கத்துடனும் நடத்துவது நல்லது.
(ஸ்ரீ அன்னையின் பொன்மொழி 17:103)

உங்கள் ஆதரவை எங்கள் மனுவில் கையொப்பமிட்டு, தங்குமிடம் மிதக்கத் தேவையான நிதியைப் பெற எங்களுக்கு உதவவும்: ஆரோவில் நாய்கள் காப்பிடம் மனு. https://www.change.org/AurovilleDogShelter
காப்பகத்தை செயல்பாட்டுடன் வைத்திருக்க தேவையான நிதியைப் பெற எங்களுக்கு உதவ எங்களது மனுவில் கையெழுத்திடுங்கள்: ஆரோவில் நாய்கள் காப்பகம் மனு. Auroville Dog Shelter Petition. https://www.change.org/AurovilleDogShelter
(அநாமதேயமாக உங்கள் பெயர் வைத்திருக்கும்படி நீங்கள் தேர்வு செய்யலாம்)
இதுவரை 800க்கும் மேற்பட்ட கையெழுத்துக்கள் சேகரிக்கப்பட்டுள்ளன! உங்கள் நன்கொடையின் மூலம் எங்களை ஆதரிக்கவும்.
குயிலாப்பாளையத்தில் உள்ள பழைய புத்தூஸில் உள்ள எங்களது நன்கொடை பேரல் உள்ளது. நன்கொடை அளிக்க, எங்களது நிதிச்சேவை கணக்கு எண் - 251391-ஐப் பயன்படுத்தவும் - அல்லது அங்கீகரிக்கப்பட்ட பிற நன்கொடைகளுக்கு எங்களது வலைதளத்தை www.aurovilledogshelter.com பார்வையிடவும்.
மிக்க நன்றி! - *ஆரோவில் நாய்கள் காப்பகக் குழு*

---

## ஆரோக்கியா ஒருங்கிணைந்த கண் மையத்தின் அறிவிப்பு

ஆரோக்கியா ஒருங்கிணைந்த கண் மையம் ஆனது 2024 நவம்பர் 5 முதல் 9 வரை எங்களின் 5வது கண் யோகா மற்றும் ஆரோக்கிய சிகிச்சையை நடத்துகிறது. உங்கள் பார்வை அமைப்பைப் புதுப்பிக்க கண் பயிற்சிகள் மூலம் நாங்கள் உங்களுக்கு வழிகாட்டுகிறோம். தயவுசெய்து இதில் எங்களுடன் சேருங்கள். இந்த நிகழ்வு பாண்டிச்சேரியில் உள்ள தி ஸ்கூல் ஃபார் பெர்ஃபெக்ட் ஐசைட் நிறுவனத்துடன் இணைந்து நடத்தப்படுகிறது. பதிவு செய்யவும் மேலும் தகவலுக்கு, பின்வரும் இணைப்பை கிளிக் செய்யவும்: https://forms.gle/6H34YeQaFyG3NHU98
விவரங்கள் மற்றும் பிற திட்டங்களுக்கு தொடர்பு கொள்ளவும் - 8012305151/ 9704258709

---

## ஜெய்ராம் அவர்களுக்கு நினைவாஞ்சலி (Remembering Jairam)



J.ஜெயராமன் அவர்களை ஜெயராம் என்ற பெயரில் அனைவரும் அறிவர், 1970-இல் மிக இளம் வயதிலேயே ஆரோவில்லில் சேர்ந்தார். அவர் ஆலங்குப்பத்தில் பிறந்தவர் (1959), கிராமத்தில் அவரது குழந்தைப் பருவம் கடினமான இருந்தது. அவர் தமது பாட்டியுடன் கோட்டக்கரையில் வசிக்கலானார், அவரது பாட்டியால் அவரை கவனித்துக்கொள்ள முடியவில்லை. ஆதலால் ஆரோவில் நகரம் வரப்போகிறது என கேள்விப்பட்ட உடனே, அதில் சேர விண்ணப்பித்தார். வரதராஜன் அவர்களின் மூலமாக, அவர் ஸ்ரீ அன்னையால் ஏற்றுக்கொள்ளப்பட்டார், டேனியல் அவர்களுடன் (முன்னோடி ஆரோவில்வாசி, அமெரிக்கா) கோட்டக்கரையில் உள்ள அவரது பண்ணையில் வசித்து வந்தார்.

ஆரோவில்லில் அவர் சேவை செய்ய மட்டுமே விரும்பினார். மிக ஆரம்ப காலகட்டத்தில் அவர் போல் வின்சென்ட் உடன் டிராக்டர் ஓட்டுநராகப் பணிபுரிந்தார், புதிதாகப் வாங்கப்பட்ட சில வயல்களை உழுதார், பின்னர் அது ஜெய்மா குடியிருப்பு ஆனது, மேலும் மாத்ரிமந்திரில் ரூட் (மற்றொரு முன்னோடி ஆரோவில்வாசி) உடன் தன்னார்வலாராகப் பணியாற்றத் தொடங்கினார், மேலும் டிராக்டர் டிரைவராகவும், மாத்ரிமந்திர் கட்டுமானப் பணியிலும் பணியாற்றினார். பின்னர் அவர் சேம்பர் நுழைவாயிலில் அர்ஜுன் பூரி, ஜான் H ஆகியோரின் வழிகாட்டுதலின் கீழ் பணியாற்றினார்.

மாத்ரிமந்திரில் பணிபுரியும்போது, அவர் மாத்ரிமந்திர் கேம்ப்பில் பல ஆண்டுகள் வசித்து வந்தார், பின்னர் சாந்தி குடியிருப்புக்கு குடியேறினார். அவர் பூமாதேவியை மணந்தார், அவருக்கு விஜயா என்ற மகளும் விஜி (விஜய்குமார்) என்ற மகனும் உள்ளனர். துரதிர்ஷ்டவசமாக, திசு அழுகல் நோயின் காரணமாக (gangrene) அவர் தமது இரண்டு கால்களையும் இழந்தார், மேலும் அவரது ஒரே வருத்தம் என்னவென்றால், ஆரோவில்லுக்கு முழுமையாகச் சேவை செய்ய அவரது உடல்நிலை அனுமதிக்கவில்லை என்பதுதான். ஆனால் அவருக்கு உடல் நலக்குறைவால் பலமுறை அறுவைச்சிகிச்சை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டாலும் அவர் மனம் தளரவில்லை.

கடந்த சில ஆண்டுகளாக மாத்ரிமந்திர் வழியாக வாகனத்திலும் சைக்கிளிலும் செல்லும் பலர், மாத்ரிமந்திர் கேட் அருகே உள்ள ஒரு பெரிய மரத்தின் அருகே சாலையோரத்தில் சக்கர நாற்காலியில் அவர் அமர்ந்திருந்ததை பார்த்திருப்பார்கள். அவர் வழிப்போக்கர்களை அன்புடன் வரவேற்று உரையாடுவார், மேலும் மாத்ரிமந்திருக்குச் செல்ல விரும்பும் அல்லது ஆரோவில்லில்

உள்ள பிற இடங்களை காண விரும்பும் விருந்தினர்களுக்கும் வழிகாட்டுவார். அவர் நீண்டகாலமாக இச்சேவையை செய்து வந்தார், சமீபத்தில், அவர் கீழே விழுந்து தலையில் காயம் ஏற்பட்டதன் காரணமாக தமது 65 வயதில் 11.10.2024 வெள்ளி அன்று தமது இல்லத்தில் காலமானார். அவரது இறுதிச் சடங்கு, 12.10.2024 சனியன்று ஆரோவில் மயானத்தில் நடைபெற்றது. *ஓம்~*
*(D. விஜயாவின் பங்களிப்புடன் அன்னிமேரி எழுதியது).*

கடந்த மாதம், யாத்ரா ஆர்ட்ஸ் மீடியா & ஸ்வரம் இணைந்து ஏவிஜ யுஎஸ்ஏ ஆதரவுடன் ஜெயராமன் அவர்களைப் பற்றிய ஒரு வீடியோ படம் தயாரிக்கப்பட்டது, அது சாந்தி குடியிருப்பில் மறைந்த ஜெயராமன் அவர்களின் வீட்டில் **26.10.2024 சனி அன்று இரவு 7.30 மணிக்கு** காண்பிக்கப்படும். மேலும் தகவல்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

---

## <u>**ஆரோசாஸ்திரி அவர்கள் காலமானார்** (Auroshastri Obitury)</u>



ஆரோசாஸ்திரி 04.07.1975 - 11.10.2024 - ஆரோசாஸ்திரி அவர்கள் பாண்டிச்சேரியில் உள்ள குளுனி மருத்துவமனையில் 04.07.1975-இல் பிறந்தார். நொலினி அவர்களிடம் அவரது தந்தை கெஹார்ட் அவருக்கு பெயர் சூட்டுமாறு கேட்டுக்கொண்டதால், அவர் ஆரோசாஸ்திரி என பெயர் சூட்டினார். ஆரோசாஸ்திரி என்பதன் பொருள் "தெய்வீகச் சட்டம் குறித்து அறிந்தவர்". ஆரோவில் இசையம்பலத்தில் வசித்தபோது, அவர் தமது ஆரம்ப காலத்தை பல நண்பர்களுடன் மகிழ்ச்சியுடன் கழித்தார் - ஆரோசில், சுக்ரித், ரிதம், ஜான் போஸ்கோ, முக்தா, ஆரோலிஸ், ஆங்கிராஸ் மற்றும் பலர். அவருக்கு ஆறு வயதாக இருந்தபோது, அவரது குடும்பம் ஜெர்மனிக்கு சில ஆண்டுகளுக்கு குடிபெயர்ந்தது, பின்னர் 1989-இல் ஆரோவில்லுக்குத் திரும்பி வந்தனர். அவர் கொடைக்கானல் இன்டர்நேஷனல் பள்ளியில் பயின்றார், 17 வயதில் ஜெர்மனிக்குத் திரும்பி சென்றார், அங்கு அவர் தமது தந்தையுடன் ஜவுளித் தொழிலில் சில ஆண்டுகள் பணியாற்றினார், மேலும் நிறைய பயணம் செய்தார். 2000-இல், தமது 25வது வயதில் ஆரோவில்லில் வசிக்க வருவதற்கு முன், அவர்களது பணியின் காரணமாக அவர்கள் பல ஆண்டுகள் இங்கிலாந்தில் வாழ்ந்தனர். மேலும் பலவற்றுடன், அவரது தந்தை கோ விளையாட்டு (GO) விளையாட அவருக்கு கற்றுக் கொடுத்திருந்தார், அதை அவர் தம் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து அனுபவித்து மகிழ்ந்தார்.

அவரது பிற்காலங்களில், அவர் தண்ணீர் குறித்த ஆர்வத்தால், அது குறித்து ஆராய்ச்சி செய்வதில் அதிக நேரத்தை செலவிட்டார். உயிருள்ள நீர் மற்றும் இயற்கை ஆற்றல்கள் சாஸ்திரியின் உணர்வுகளாக இருந்தன, இது அவரைச் சுற்றியுள்ள உலகத்தைப் புரிந்துகொள்வதில் ஆர்வத்தையும் உறுதியையும் ஏற்படுத்தியது. அவர் கருத்துகளை வெறுமனே படிப்பதில் திருப்தி அடையவில்லை - அவர் அவற்றைச் சோதித்து, அவற்றை நேரில் அனுபவித்து அவற்றைத் தமது சொந்தமாக்கிக் கொள்ள வேண்டும் என விரும்பினார். அது அவர் வகுத்த ஒரு பரிசோதனையாக இருந்தாலும் சரி அல்லது அவர் சுயமாக முயற்சித்த கோட்பாடாக இருந்தாலும் சரி, மற்றவர்கள் அவருடைய சிந்தனையைப் புரிந்துகொள்ள முடியாதபோதும் அவர் தமது நம்பிக்கையின் மீது உறுதியாக இருந்தார்.

பூமியில் வெறுங்காலுடன் நடப்பதும், கடலில் நீந்துவதும் இயற்கையோடு இயைந்து உடலை சமநிலைப்படுத்தி, மீண்டும் இணைவதற்கான இயற்கையான வழிகள் ஆகும். அவர் ஒவ்வொரு புதிய ஹீலிங் சிகிச்சை நுட்பத்தையும் ஆழ்ந்த ஈடுபாட்டுடன் ஆராய்ந்தார், அடுத்த கண்டுபிடிப்புக்குச் செல்வதற்கு முன் அதை முழுமையாகப் புரிந்துகொள்ளும் வரை அதில் மூழ்கினார். வாழ்க்கையின் ஆரோக்கியத்திற்கும் உயிர்ச்சக்திக்கும் தண்ணீரின் முக்கியத்துவத்தை அவர் புரிந்துகொண்டார். இயற்கைக்கு மாறான, அசுத்தமான நீரின் எதிர்மறையான விளைவுகளை பலருக்கு முன்பே அவர் உணர்ந்து கொண்டார்.

ஆரோசாஸ்திரி அவர்கள் வலுவான கருத்துகளைக் கொண்டிருந்தார், தைரியமான, வழக்கத்திற்கு மாறான எண்ணங்கள் நிறைந்தவராக இருந்தார். அவர்தம் தனிப்பட்ட போக்குகளை ஏற்றுக்கொண்டார், பெரும்பாலும் சமூகத்தின் விளிம்புகளில் வாழ்க்கையை அனுபவித்தார். அவர் தமது காலத்திற்கு அப்பாற்பட்டவை குறித்து சிந்தித்தார், மற்றவர்கள் எப்போதும் பார்க்க முடியாத ஓர் உலகத்தை கற்பனை செய்தார். அவர் தமது சொந்த பாதையைத் தேர்ந்தெடுத்து தமது சொந்த வாழ்க்கையை வாழ்ந்தார். அவரது வெற்றி தோல்விகளின் போது அவர் பலரின் இதயங்களையும் மனதையும் தொட்டார். அவரது இழப்பு பேரிழப்பாகும். அன்பிற்கு ஒருபோதும் மரணமில்லை. *ஓம்~*
*பாபி, சூர்யன், அலோக்*

---

### <u>**ஸ்ரீ அன்னையின் அருள்மொழிகள் – தவறுகள்**</u>

**ஒரு தவறு செய்துவிட்டால், எப்போதுமே அதை முன்னேற்றத்திற்கு ஒரு சாதனமாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். வேண்டிய மாற்றம் ஏற்பட்டபின், தவறும் அதற்கான காரணமும் மறைந்துவிடும், பிழை மீண்டும் நேராது.**

**ஒரு தவறை ஒப்புக்கொண்டபோது அது மன்னிக்கப்பட்டு விடுகிறது.**

**ஒருவன் தான் செய்த தவற்றை ஒப்புக்கொள்ள மறுத்தால் அவன் அதைத் திருத்திக்கொள்ள மறுக்கிறான் என்று அர்த்தம்.**

**செய்த தவற்றுக்கு வருந்துதல்: தவறுகளைத் திருத்துவதற்கு முதல் அடி.**

**நீ செய்ததற்குச் சமாதானம் சொல்லுவதில் பயனில்லை; நீ செய்த தவறுகளை மீண்டும் செய்வதில்லை என்னும் சங்கற்பம் உனக்கு இருக்கவேண்டும்.**

**ஒவ்வொரு இரவிலும் உறங்கப் போவதற்கு முன், அந்த நாளில் நாம் செய்திருக்கக்கூடிய தவறுகளை மீண்டும் செய்யாதிருக்க வேண்டும் என்று பிரார்த்திக்க வேண்டும்.**